நடவடிக்கை எடுத்து அந்தத் தார்ச் சாலைகளைப் புதுப்பித்துத் தர வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கரூர், வெங்கமேடு மின் வாரிய அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும்.

கரூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் அம்மா ஆட்சியில் வழங்கப்பட்டது, இன்று மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. புதிய சிடி. ஸ்கேன் வழங்கப்பட வேண்டும். அதேபோல, கரூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் நரம்பு மருத்துவர், தோல் நோய் மருத்துவர் இல்லாத நிலை இருக்கிறது. அந்த மருத்துவர்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெரூர் தென்பாகம், வடபாகம், சோமூர் ஊராட்சிகளுக்கு புதிய காவிரிக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். புலியூர், மேலப்பாளையம் பகுதியில் இருக்கின்ற, புலியூர் பேரூராட்சி, கோயப்பள்ளி பகுதியில் இருக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கைகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் நாளை பதிலுரை அளிப்பார்கள்.

பிற்பகல் 1-45

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (5-5-2010) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 5-5-2010, புதன்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 5-5-2010, புதன்கிழமை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-5-2010) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-45 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

76. யாதொரு வணிகர், கோயம்புத்தூரிலுள்ள திருவாளர்கள் ஈஷா பவுண்டேஷனுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருள்களை அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு விற்பனை செய்ததன்பேரில் செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 2-2-2010 ஆம் நாளிட்ட 12 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

77. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (திரைப்படம்) துறையின் 20-5-2009 ஆம் நாளிட்ட 405 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].